**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 114/2016**
**நாள்.18.02.2026**
**பி.வா.சா.1- விஜயா**
**க/பெ - தங்கவேல்**
**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் படிக்கவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரண சொத்திற்கு வாதி என் மீது வழக்க தாக்கல் செய்துள்ளார் என்றால் 7 1/2 செண்ட் நிலத்திற்கு வழக்கை தாக்கல் செய்துள்ளார் . மேற்படி 7 1/2 செண்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது.

2. வாதி ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் நான் கடன் கேட்டேன், அது சம்பந்தமாக 100 க்கு ரூ.3/- வட்டி வீதம் கடன் கொடுக்க முன்வந்தார். அதனால் மேற்கண்ட ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தினேன்.

3. வாதியோடு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பு எவ்வளவு காலம் வாதியை தெரியும் என்றால் ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியோடு ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த ஆவணத்தின்படி கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை.

4. இவ்வழக்கில் எனது தரப்பில் வழக்கை நடத்துவதற்கு வழக்கறிஞரை நியமித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களையும், எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களையும் நான் சொல்லி வழக்கறிஞர் தயாரித்தார் என்றால் சரிதான்.

5. எதிர்வழக்குரையிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் அதுபற்றி தெரியவில்லை.

6. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டேன் என்றாலும், வாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் உண்மையானது என்பதால் தான் எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**